செய்து தருவதோடு மத்திய சர்க்கார் மூலம் நடத்தப்படுகிற பெருந் தொழில்களை இந்த பிற்பட்ட பகுதியில் தொடங்கவும் அதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்கான உதவிகளைச் செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சியான பகுதி, பின்தங்கிய பகுதி என்று கருதி மாநில அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து நிரந்தரமான வளர்ச்சிப் பணிகளைச் செய்ய திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறது.

பெரிய கிராமங்களுக்கு கூடுதல் தலையாரிகள் நியமிக்கும் திட்டம்.

*வினா எண். 104 திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாக் கிராமங்களிலும் மூன்று தலையாரிகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளதா?

(ஆ) பெரிய கிராமங்களுக்குக் கூடுதல் தலையாரிகள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): முன்னாள் வருவாய் வாரியத்தின் நடவடிக்கைகளின்படி 4,500க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு மூன்று கிராமக் காவலர்கள் வரையிலும் நியமிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. 3 பேர்களுக்கு மேல் நியமிக்கக்கூடாது என்று உத்திரவு போடப்படவில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பல கிராமங்களைப் பார்வையிட வேண்டியிருக்கிறது. அந்தக் காரணத்தினால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இன்னும் அதிகமான அளவில் கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நிரந்தரமான கிராம அதிகாரிகளைப் போடுவதற்கு இன்றைக்கு அரசு திட்டங்களைப் போட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம்: கிராம அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது அரசுக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்த நேரத்திலே எல்லாம் தலையாரிகள் அரசுக்கு ஆதரவாக இருந்தார்கள். அவர்களுக்கு வெகுமதியாக அவர்களில் வயதானவர்கள் என்று சொல்லி ஒரு தாலுக்காவுக்கு 50 பேர்கள் வீதம் பணி

[1981 ஆகஸ்டு 31]

நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தலையாரிகள் இல்லாத கிராமங்களிலே அவர்களுக்குப் பணி கொடுக்கப்படுமா? அவர்களுடைய வாரிசுகளுக்கு அந்தப் பணியிலே முன்னுரிமை கொடுத்து நியமிக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறைமுகமாக பரிசா என்று கேட்டிருக்கிறார்கள். உதவி செய்தவர்களுக்கு பரிசாகாது. ஆனால் வயதானவர்களை வெளியே அனுப்புவது பற்றி சட்டதிட்டத்திலே இருக்கிறது, கீழ் நிலையிலிருந்து தலைமை வரையில் வயது ஆனவர்கள் அரசின் சட்டதிட்டப்படி வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூடச் சொன்னார்கள் தலையாரிகள் சம்பந்தமாக நிச்சயமாக முன்னுரிமை அளிக்கப்படும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று. கிராம அதிகாரிகளுக்கு சிற சிறு விஷயங்கள் வந்தாலும் அவர்களையே விட்டுவிட்டு வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களை படிப்பு காரணம் காட்டி, பச்சையாகச் சொன்னால் ஜாதி காரணம் காட்டி பெரும் அநீதி இழைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள கீழ்த்தரத்தில் உள்ள சிப்பந்திகள் வேண்டுகோள் அரசுக்குக் கொடுத்து இருப்பது தெரியுமா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஜாதியைக் காரணம் காட்டி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசுக்கு குறிப்புகள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கவனிக்கப்படும். அடிப்படை ஊழியர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் செய்ய அரசு தயாராக இருக்கிறது. அதற்கும் சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அதற்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி டி. யசோதா : தேவையான அளவுக்கு கிராம அதிகாரிகள் இல்லாததால் இலவசமாக மனைப் பட்டாக்கள் வழங்குவதிலே காலதாமதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலையாரிக்கும் பட்டாவுக்கும் என்ன சம்பந்தம்?

திருமதி டி. யசோதா : தலையாரிகள் இல்லாததால் தாமதம் அதிலே ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரம் என்ன? இந்த 4,500 என்பது எந்த ஆண்டு கணக்குப்படி குறிக்கப்பட்டது. அதைப்பற்றிய விவரங்களைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வீட்டு மனை கொடுப்பதிலே எங்கேயும் தடங்கல் ஏற்படவில்லை. 4,500 என்பது 1921 கணக்குப்படிதான். இப்போது அதிகப்படுமானால் அதற்குத் தகுந்தபடி புதிய அலுவலர்களைப் போடலாம்.